


**05.06.2025**

## தலைப்பு செய்திகள்

1. **ஏழை மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான நலத்திட்டங்களை** மத்திய அரசு அர்ப்பணிப்புடன் செயல்படுத்தி வருவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. **புவியை பாதுகாத்து உயிரினங்களின் நலவாழ்விற்கு வகை** செய்ய மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.பூபேந்தர் யாதவ் அழைப்பு விடுத்துள்ளார்.

3. **தமிழ்நாட்டில் நெகிழி பயன்பாடு முற்றிலும்** ஒழிக்கப்பட வேண்டுமென்று முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் வலியுறுத்தினார்.

4. **மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ்** சிறு வணிக நிறுவனங்ளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் நோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என்று மாநில அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

5. **இந்தோனேஷியா ஓப்பன் பேட்மிட்டன்** ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் ரான்கிரெட்டி, சிராக் ஷெட்டி இணை - டென்மார்க் இணையை இன்று எதிர்கொள்கிறது.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

**பிரதமர் – 11**

**நாட்டில் வறுமையில் உள்ள மக்களுக்கு** அதிகாரமளித்து, அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்கியதன் மூலம் கடந்த 11 ஆண்டுகளில் அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் பிரதமரின் வீட்டுவசதி திட்டம், சமையல் எரிவாயு திட்டம், ஜன்தன் வங்கி கணக்கு, சுகாதாரம் உள்ளிட்ட திட்டங்களை குறிப்பிட்டுள்ளார்.

இத்திட்டங்கள் மூலம் 25 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வறுமையிலிருந்து மீண்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖

**பிரதமர் - ஜம்மு காஷ்மீர்**

இதனிடையே பிரதமர் ஜம்மு காஷ்மீரில் 46 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் வளர்ச்சித்திட்டப்பணிகளை நாளை நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பின்னர் முதல்முறையாக ஜம்முகாஷ்மீர் செல்லும் பிரதமர், உலகின் உயரமான ரயில்வே பாலமாக அமைந்துள்ள செனாப் பாலம், அன்ஜி பாலம் உள்ளிட்டவற்றை திறந்துவைத்து வந்தே பாரத் ரயில் சேவையை தொடங்கிவைக்கவுள்ளார்.

❖❖❖❖❖❖❖

**பிரதமர் - சுற்றுசூழல்**

பூமியை பாதுகாக்க அரசு மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளிலும் மக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்புடன் பங்கேற்க வேண்டுமென்று பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி, பிரதமர் வெளியிட்டசமூக வலைதள காணொளியில், பசுமை சூழலை உருவாக்க முன்முயற்சிகளை மேற்கொள்ளும் அனைவருக்கும் பாராட்டு தெரிவித்தார்.

பிளாஸ்டிக் பயன்பாட்டை முற்றிலும் ஒழிப்போம் எனும் கருப்பொருளுடன் இந்த ஆண்டு இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி தாயின் பெயரில் மரக்கன்று நடும் திட்டத்தின் கீழ் சிறப்பு இயக்கத்தை புதுதில்லி பிரதமர் இல்லத்தில் குங்குமப்பூ மரக்கன்றை நட்டு தொடங்கி வைத்தார்.

குஜராத், ராஜஸ்தான், ஹரியானா மற்றும் டெல்லியை உள்ளடக்கிய ஆரவள்ளி மலைத்தொடரில் சுற்றுச்சூழல் புத்துயிர் பெற இது வழிகோலும் என பிரதமர் கூறினார்.

தொடர்ந்து சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் 200 மின்சார பேருந்து சேவையையும் அவர் தொடங்கி வைத்தார்.

❖❖❖❖❖❖❖

**தர்மேந்திர பிரதான்**

இதனிடையே அன்னையின் பெயரில் ஒரு மரக்கன்று நடும் 2-ம் கட்ட இயக்கத்தில் பெருந்திரளானோர் பங்கேற்க வேண்டுமென்று மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று தொடங்கி வரும் செப்டம்பர் 30-ம் தேதிவரை இத்திட்டத்தின்கீழ் 10 கோடி மரக்கன்றுகள் நட இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖

**பூபேந்தர் யாதவ்**

புவியை பாதுகாத்து உயிரினங்களின் நலவாழ்விற்கு வகை செய்ய மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.பூபேந்தர் யாதவ் அழைப்பு விடுத்துள்ளார்.

சுற்றுச்சூழல் தினத்தை ஒட்டி தமது சமூக வலைதளப்பதிவில் இதனை தெரிவித்துள்ள அவர், நாம் பாதுகாப்பை வலுப்படுத்தும் போது இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖

**முதலமைச்சர்**

சென்னையில் உலக சுற்றுச்சூழல் தினவிழாவில் இன்று உரையாற்றிய முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின், தமிழ்நாட்டில் நெகிழி பயன்பாட்டை முற்றிலும் ஒழிப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

சுற்றுச்சூழலை பாதுகாக்க தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும், நாட்டின் மிகச்சிறந்த சுற்றுச்சூழல் கட்டமைப்பு மாநிலத்தில் உருவாக்கி உள்ளதாகவும் கூறினார்.

தமிழ்நாடு பசுமை இயக்கம் மூலம் 10 கோடிக்கும் அதிகமான மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழ்நாடு காலநிலை மாற்ற திட்டம் மூலம் கார்பன் உமிழ்வை கட்டுப்படுத்துவது உள்ளிட்ட பணிகளை செய்துள்ளதாக எடுத்துரைத்தார்.

நாட்டிலேயே அதிகளவில் ராம்சார் இடங்கள் தமிழ்நாட்டில் உள்ளதாக முதலமைச்சர் பெருமிதம் தெரிவித்தார்.

.. வாய்ஸ் ..

**முன்னதாக** தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் புதிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்திற்கு அடிக்கல் நாட்டியதோடு, ராமநாதபுரம் மாவட்டம், தனுஷ்கோடியில் கிரேட்டர் பிளமிங்கோ பறவைகள் சரணாலயம் 14 கடலோர மாவட்டங்களில் மீன்வலை மறு சுழற்சி திட்டங்களையும் முதலமைச்சர் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு கடந்த 4 ஆண்டுகளில் புதிதாக ஆயிரம் பூங்காக்கள், 62 காப்பு காடுகள், 2 பறவைகள் சரணாலயங்கள் உருவாக்கப் பட்டுள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖

**சுற்றுசூழல் நயினார் நாகேந்திரன்**

சுற்றுசூழல் தினத்தை முன்னிட்டு தமிழக பி.ஜே.பி. சார்பில் தாம்பரம் ராஜ கீழ்பாக்கம் ஏரிபகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற பின் செய்தியாளர்களிடம் பேசிய பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன், பிரதமர் திரு.நரேந்திரமோடி ஆட்சியில், கடந்த 11 ஆண்டுகளில் விவசாயிகள் இயற்கை உரத்திற்கு அதிமுக்கியத்துவம் அளித்து வருவதால் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதாக கூறினார்.

முன்னதாக அப்பகுதியில் மரங்களை நட்டதோடு தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

❖❖❖❖❖❖❖

**சுற்றுச்சூழல் மாவட்டங்கள்**

இத்தினத்தை முன்னிட்டு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு மாவட்டங்களில் சுற்றுச்சூழல் தின பிளாஸ்டிக் ஒழிப்பு பேரணி நடைபெற்றது.

**சேலத்தில்** இப்பேரணியை மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேந்திரன் தொடங்கிவைத்து, பள்ளி கல்லூரி மாணாக்கருக்கு மஞ்சப் பை மற்றும் மரக்கன்றுகளை வழங்கினார்.

**அரியலூர் மாவட்டத்தில் சுற்றுச்சூழலை** பாதுகாக்கும் வகையில் மருத்துவக் கல்லூரி மாணாக்கர் பங்கேற்ற சைக்கிள் பேரணி நடைபெற்றது.

**கள்ளக்குறிச்சியில்** மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் இப்பேரணியை துவக்கிவைத்தார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

**காயிதே மில்லத்**

**கண்ணிய தென்றல் காயிதே மில்லத்தின் 130-வது** பிறந்தநாளை ஒட்டி சென்னை திருவல்லிக்கேணியில் அன்னாரது நினைவிடத்தில் முதலமைச்சர் இன்று மரியாதை செலுத்தினார்.

மாநில அமைச்சர்கள் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖

**அனைத்து கட்சி குழுவினர்**

**தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் பூஜ்ஜிய** சகிப்புத்தன்மை நிலைப்பாட்டை உலக நாடுகளிடையே எடுத்துரைக்கும் ஒருபகுதியாக காங்கிரஸ் கட்சியின் மக்களவை

உறுப்பினர் திரு. சசிதரூர் தலைமையிலான குழு அமெரிக்காவில், தலைவர்கள், மூத்த அதிகாரிகள், இந்திய வம்சாவளியினரிடையே எடுத்துரைத்தனர்.

வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய திரு. சசிதரூர் தீவிரவாதத்திற்கு அனைவரும் ஒருமனதாக கண்டனம் தெரிவித்ததாக கூறினார்.

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைக்கு வலுவான நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியதற்கு அவர் நன்றி தெரிவித்தார்.

பல்வேறு உலக நாடுகளிடையே இதுதொடர்பாக அனுப்பப்பட்ட 7 குழுக்களில் 5 குழுக்கள் தங்களது பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்து தாயகம் திரும்பியுள்ளது.

❖❖❖❖❖❖❖

**மா. சுப்ரமணியன்**

மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் விரிவாக்கம் செய்யப்படும் முகாமை சென்னை கிண்டியில் மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் இன்று தொடங்கி வைத்தார்.

சிறு வணிக நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களில் தொழிலாளர்களை தேடி பணியிடம் சார்ந்த தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ள இத்திட்டம் வழிகோலும் என அமைச்சர் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

**சேகர்பாபு**

**நாகை மாவட்டம், திருப்புகலூர் அருள்மிகு** அக்னீஸ்வரர் சுவாமி திருக்கோவில் குடமுழுக்கு இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

மாநில அமைச்சர்கள் திரு. சேகர்பாபு, திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் திரு.சேகர்பாபு, கடந்த 4 ஆண்டுகளில் நடைபெற்ற மூன்றாயிரமாவது குடமுழுக்கு இதுவாகும் என தெரிவித்தார்.

பக்தர்களின் வசதிக்காக பழனி மலைக்கு மேலும் ஒரு ரோப்கார் சேவை விரைவில் தொடங்கப்படும் என்று அமைச்சர் அறிவித்தார்.

❖❖❖❖❖❖❖

## MBBS, BDS

**தமிழகத்தில் பொறியியல் கல்லூரிகளில் மாணாக்கர்** சேர்க்கைக்கு விண்ணப்பிக்க நாளை கடைசி நாளாகும்.

விண்ணப்ப பதிவு செய்த மாணாக்கர் தங்களது சான்றிதழ்களை வரும் 9-ம் தேதிக்குள் பதிவேற்றம் செய்யலாம்.

இதனிடையே தமிழ்நாட்டில் **MBBS, BDS** படிப்புகளுக்கு நாளைமுதல் விண்ணப்பிக்கலாம் என அரசு அறிவித்துள்ளது.

நீட் தேர்வு முடிவுகள் வரும் 14-ம் தேதி வெளியாகவுள்ள நிலையில் விண்ணப்பிக்க கால அவகாசம் வழங்கும் வகையில் இந்நடவடிக்கை.

❖❖❖❖❖❖❖

**கோவிட்**

**நாட்டில் கோவிட் தொற்று பாதிப்பு மீண்டும்** அதிகரித்து வரும் நிலையில் மருத்துவமனைகளில் ஆக்ஸிஜன், தனிமை படுக்கைகள், செயற்கை சுவாச கருவிகள் மற்றும் அத்தியாவசிய மருந்துகளின் போதிய இருப்பை உறுதி செய்யுமாறு அனைத்து

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு மத்திய சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சிறப்பு பிரிவு தயார்நிலையில் உள்ளது.

50 படுக்கைகளுடன் அதிநவீன மருத்துவ உபகரணங்களும் தயார் நிலையில் உள்ளதாக மருத்துவ நிர்வாகம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

**அன்பழகன்**

17-வது சர்வதேச லெவல் கிராசிங் விழிப்புணர்வு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இதையொட்டி திருச்சி ஜங்ஷன் ரயில் நிலையத்தில் விழிப்புணர்வு பேரணியை திருச்சி ரயில்வே கோட்ட மேலாளர் திரு. அன்பழகன் தொடங்கிவைத்தார்.

300-க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற இப்பேரணியில் ரயில்வே தண்டவாளங்களின் குறுக்கே பொதுமக்கள் கடந்து செல்வதால் நேரிடும் விபத்துகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

❖❖❖❖❖❖❖

**காஞ்சிபுரம் வாய்ஸ்**

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் இந்தியன் வங்கி ஊரக** சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் மூலம் இலவச பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து இம்மையத்தின் பயிற்றுனர் தெரிவிக்கையில்

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖

**நெல்லை வாய்ஸ்**

**நெல்லை மாவட்டம் மணிமுத்தாறு அருவியில்** தண்ணீர் வரத்து சீரானதால் சுற்றுலா பயணிகள் குளிக்க வனத்துறை அனுமதி வழங்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖

**இருவரி**

**தூத்துக்குடி மதுரை தேசிய நெடுஞ்சாலையில்** உள்ள புதுபாண்டியபுரம் சுங்கச்சாவடியில் கட்டணவசூல் நிறுத்தப்பட்டுள்ளது. உயர்நீதிமன்ற கிளையின் உத்தரவை அடுத்து இந்நடவடிக்கை.

**பக்ரீத் பண்டிகை நாளைமறுநாள் கொண்டாடப்பட** உள்ள நிலையில் ஈரோடு மாவட்டம் புஞ்சை புளியம்பட்டி கால்நடை சந்தை,

**தென்காசி** பாவூர் சத்திரம் ஆட்டுச்சந்தை உள்ளிட்ட இடங்களில் விற்பனை களைகட்டியுள்ளது.

❖❖❖❖❖❖❖

**பேட்மிட்டன்**

**இந்தோனேஷியா ஓப்பன் பேட்மிட்டன்** ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் ராங்கிரெட்டி, சிராக் ஷெட்டி இணை - டென்மார்க் இணையை இன்று எதிர்கொள்கிறது.

மகளிர் இரட்டையர் பிரிவில் ட்ரீஸா ஜாலி, காயத்ரி கோபிசந்த் இணை – ஜப்பான் இணையிடம் தோல்வியடைந்தது.

❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖